செ. கு. எண்:024 நாள் :18.01.2014

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 18.1.2014</u>

26.12.2013 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை வனச்சரகம் அருகே மருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் மாணிக்கம்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமம் அருகே கெண்டேபாளையம் என்ற பகுதியைச் சேர்ந்த திரு. ராமகிருஷ்ணன் என்பவரின் மனைவி ரங்கதாய்;

29.12.2013 அன்று ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பெரியகுன்றி தடுப்பணை அருகே தூக்கநாயக்கன்பாளையம் வனச்சரக பகுதியில் வனக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஏழுமலை;

--- ஆகியோர் காட்டு யானைகள் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தோலம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோங்கரை என்பவரின் மகன் முருகன் 30.12.2013 அன்று மஜரா ஊக்கையனூர், புதுக்காடு வனப்பகுதியில் காட்டு எருமையால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 31.12.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த மாணிக்கம், ரங்கதாய், ஏழுமலை, மற்றும் காட்டு எருமையால் தாக்கப்பட்டு உயிரிழந்த முருகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9